(உ) திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஒப்புக்கொள்ளாத ஒன்றை அவர் ஒப்புக்கொண்டதாக முதலமைச்சர் கூறியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், தான் ஒப்புக்கொள்ளாத ஒன்றை ஒப்புக்கொண்டதாக முதலமைச்சர் கூறினார் என்ற அளவில் ஒரு உரிமை பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். இந்த உரிமைப்பிரச்னை, முன்பு எழுப்பிய ஒரு உரிமைப்பிரச்னைக்குத் தீர்ப்பளித்த வகையிலே அடங்கிவிடுவதால் இந்த உரிமைப்பிரச்னைக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நம்முடைய 186-வது விதியில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு உறுப்பினர் உரிமைப்பிரச்னை எழுப்பும் நேரத்தில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து சபை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது. எப்படி உரிமைப்பிரச்னையில் வருகிறது என்று என்னுடைய கருத்தைக்கூடக் கூறுவதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை என்றால் . . .

THIRU V. KRISHNAMOORTHY: The Hon. Speaker has already given his decision on the matter.

THIRU P. SOUNDARAPANDIAN: It is different matter

THIRU V. KRISHNAMOORTHY: It should not be raised; the Hon. Speaker has already given his decision.

THIRU P. SOUNDARAPANDIAN: It is entirely a different matter It has no relation with this issue. தயவு செய்து படிக்கவாவது அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது இரண்டும் ஒரே நிலையிலே தொடர்புடைய உரிமைப்பிரச்னைகள். ஆகவே, ஒரு உரிமைப்பிரச்னைக்குத் தீர்ப்பளித்த பிறகு இதற்குத் தீர்ப்பளிக்க வேண்டியதில்லை என்று சொல்லியதற்குப் பிறகு மீண்டும் அதை எழுப்புவது முறையல்ல.

THIRU P. SOUNDARAPANDIAN: No. No. It is entirely a different matter and not the same thing. எந்த இடத்தில் நான் ஒத்துக்கொண்டேன்? நான் ஒத்துக்கொண்டதாக அவைக் குறிப்பிலே இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி விரிவாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி முடிவு தந்து விட்டபிறகு, அந்தக் கடிதம் உங்களால் எழுதப்படவில்லை என்று முடிவெடுத்தபிறகு அதைப்பற்றி விவாதம் தொடங்குவது முறை யல்ல.

(4) அறிவிப்புகள்.

(அ) ஆவணங்களைப் பேரவையில் படிப்பது குறித்தும், குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவது குறித்தும் பின்பற்றப் பட வேண்டிய முறைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் உரை நிகழ்த்தும் பொழுது ஏதாவதோர் ஆவணத்தைப் பேரவையில் படிக்கவேண்டு மெனில், அதனை முன்னதாகவே பேரவைத் தலைவரிடம் காட்டி, அவரது அனுமதியைப் பெற்ற பின்னரே படிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக, பேரவையின் உறுப்பினர் ஒருவரால் எழுதப்பட்ட கடிதம் அல்லது ஆவணம் ஒன்றைப் பேரவையில் படிக்க விரும்பினால், அதனைப் பேரவைத் தலைவர், யாரால் எழுதப் பட்டது என்று கூறப்படுகிறதோ அந்த உறுப்பினரிடம் காட்டி அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து அனுமதி வழங்கிய பின்னரே அவையில் படித்தல் வேண்டும்.

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது, வேறோர் உறுப்பினர் மீது குறிப்பிட்டு ஏதாவது குற்றம் சாட்ட விரும்பினால், அக்குற்றச் சாட்டைப் பேரவைத் தலைவரிடம் முன்னதாகவே கூறி, பேரவைத் தலைவர் அதைக் குற்றம் சாட்டப்படும் உறுப்பினருக்குத் தெரிவித்ததன் பின்னரே, அதற்கான அனுமதி வழங்குவார். அவ்வித அனுமதியின்றி, எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் மீது தமது உரையில் குற்றம் சாட்டுவது கூடாது.